2018 ஜூன் 6]

அதேபோல, பன்னிரெண்டாம் வகுப்புத் தேர்வில் 200-க்கு 200 மதிப்பெண் பெற்றவர்கள் 69 பேர். 1,100 மதிப்பெண்களுக்குமேல் பெற்றவர்கள் 74 பேர். அதேபோல, 1,000 மதிப்பெண்களுக்குமேல் பெற்றவர்கள் 326 பேர். 3 பள்ளிகளில் மாணவர்கள் 100 சதவிகிதம் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள், கடந்த ஆண்டு 2 பள்ளிகள்தான். இப்படி சிறப்பான முறையிலே செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அனைத்து சமுதாயப் பள்ளிகளையும் சிறப்பாக இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 135, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

135—

மீன்பிடித் துறைமுகம்

***16334—திரு. டி.ஆர்.பி. ராஜா:**

மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டையில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை, ஆசாத் நகரில் சுமார் 70 எண்ணம் கண்ணாடி நாரிழைப் படகுகள் மட்டுமே மீனவர்களால் மீன்பிடிப்புக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இப்படகுகளைக் கொண்டு மீனவர்கள் கோரையாற்றில் சுமார் 4 கிலோ மீட்டர் பயணித்து, முத்துப்பேட்டை காயல் மற்றும் உப்பங்கழியில் அதாவது, lagoon-*ல் மீன்பிடித்துத் திரும்புகின்றனர். இப்பகுதி காப்புக் காடுகளின்கீழ் அறிவிக்கப்பட்டு, வனத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. மேலும்,*

கடல் நீர் ஏற்ற காலங்களில், அதாவது high tide காலங்களில், சேறு மற்றும் களிமண்ணுடன் கடல் நீர் கோரையாற்றில் உட்புகுவதால், கோரையாற்றின் நீர் மட்டம் 1 முதல் 1½ அடி வரையே உள்ளது. மீனவர்கள் சுமார் 4 கிலோ மீட்டர் பயணித்து, முத்துப்பேட்டை காயல் மற்றும் உப்பங்கழியில் (lagoon) மீன்பிடித்திட ஏதுவாக மணல் திட்டுக்கள் உருவாகும்போது ஆற்றின் முகத்துவாரத்தினை தூர் எடுத்திடும் நிலை ஏற்படுவதாலும், கோரையாற்றின் கரையில் சுமார் 3 கிலோ மீட்டர் தூரத்திற்கு காப்புக் காடுகளின்கீழ் அறிவிக்கப்பட்டு, வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளதாலும், மீன்பிடித் துறைமுகம் அமைத்திட வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறையின் அனுமதி பெறுவதற்குச் சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டையில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கான திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள்.

திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் தலைநகராக இருக்கக்கூடிய சென்னை நகரில் மீனவப் பெருங்குடி மக்கள் பெரிதும் பயன்படக்கூடிய வகையிலே, திருவள்ளூர், காஞ்சிபுரம், சென்னை என்ற மூன்று மாவட்ட மீனவர்கள், மீன்பிடிக்கப் பயன்படுத்துகின்ற சென்னை காசிமேடு மீன்பிடித் துறைமுகத்தில், 6, 7 பழைய படகுகள் மீன்பிடித் துறைமுகத்தில் தண்ணீரிலே மூழ்கியிருக்கின்றன.

முற்பகல் 10-45

வேகமாக வீசுகின்ற சூறைக் காற்று, வர்தா புயல் போன்ற நேரங்களில், புயலால் பாதிக்கப்பட்டுவிடுவோம் என்கின்ற பயத்தில் இருக்கக்கூடிய மீனவர்களுக்கு, மூழ்கியிருக்கின்ற படகுகளில் மற்ற படகுகள் மோதி, நிறைய படகுகள் சேதமடையக்கூடிய நிலை இருக்கின்றது. அந்தப் படகுகளை உடனடியாகக் கரைக்கு கொண்டுவர மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். அதேபோல, அந்த மீன்பிடித் துறைமுகத்திலே. . .

2018 ஜூன் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் போதும், அவ்வளவுதான், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. கே.பி.பி. சாமி, போதும் உட்காருங்கள். (குறுக்கீடு) ஒரு கேள்வி கேட்டால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். (குறுக்கீடு) சரி, கேளுங்கள்.

திரு. கே.பி.பி. சாமி: அந்த மீன்பிடித் துறைமுகத்தில் சேறும், சகதியும் இருக்கின்ற காரணத்தால், அந்தப் படகுகளிலிருந்து மீனை அள்ளக்கூடிய மீனவர்கள் தவறி கீழே விழுகின்றபோது, அவர்கள் அந்த சேற்றிலே சிக்கி, இறந்துவிடக்கூடிய நிலையும் ஏற்படுகின்றது. கடந்த காலங்களில், 2, 3 பேர் இறந்து போயிருக்கின்றார்கள். சென்னை துறைமுகத்தில் மட்டுமல்ல, ஒவ்வொரு மீன்பிடித் துறைமுகத்திலும் இந்த நிலை இருக்கிறது. எனவே, மீன்பிடித் துறைமுகங்களில் உள்ள சேற்றினை அகற்றி உடனடியாக தூர் வாரித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள் எழுப்பிய வினா, மூலவினாவிற்குச் சம்பந்தமில்லை என்றாலும்கூட, அவருடைய அன்பின் காரணமாக, நான் இந்தப் பதிலைச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள், இரண்டு கேள்விகளைக் கேட்டிருக்கின்றார்கள். ஒன்று, காசிமேடு. அதாவது, சென்னை மீன்பிடித் துறைமுகம். அந்தத் துறைமுகத்திலே படகுகள் மூழ்கும்போது அவற்றைக் கரை சேர்க்க வேண்டும் என்பதுதானே உங்களுடைய கோரிக்கை. இரண்டாவது அந்தத் துறைமுகத்தை முழுமையான அளவிற்கு ஆழப்படுத்தி, அதில் உள்ள சகதிகளை தூர் வாராமல் இருப்பதன் காரணமாக, சில நேரங்களில் மீனவர்கள் தவறி விழுகின்ற சூழ்நிலையில், மீனவர்கள் இறக்கின்ற நிலை ஏற்படுகிறது. இந்த மீன்பிடித் துறைமுகத்தைப் பொறுத்தவரை, இது State Government control-ல் கிடையாது. சென்னை மீன்பிடித் துறைமுகம் மட்டும் மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டிலே வருகின்றது. மத்திய அரசின் management-ல் வருகிறது. எனவே, இதனை முழுமையான அளவிற்கு மாநில அரசின் கட்டுப்பாட்டில்

[2018 ஜூன் 6

கொண்டு வர வேண்டுமென்பதற்காக, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வற்புறுத்தியதன் அடிப்படையிலே சென்னை துறைமுகம் ஒரு தீர்மானத்தை இயற்றி, மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறது. சமீபத்திலேகூட, நான் டெல்லிக்குச் சென்றிருந்தபோது, மாண்புமிகு மத்திய அமைச்சர் அவர்களை நேரிலே சந்தித்து, இதுசம்பந்தமாக வலியுறுத்தியிருக்கிறேன். எனவே, இந்த மீன்பிடித் துறைமுகம் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருந்து வருகின்ற காரணத்தால், எந்தவொரு திட்டத்தையும் மாநில அரசு நிறைவேற்ற முடியாத சூழ்நிலை இருக்கின்றது. எனவே, இதை மாநில அரசுக்கு மாற்றம் செய்ய வேண்டுமென்ற அந்தக் கருத்துரு சென்னை துறைமுகத்தால் அனுப்பப்பட்டு, அதனடிப்படையிலே அது மத்திய அரசிடம் நிலுவையில் இருக்கிறது. உடனடியாக, அதை மாநில அரசுக்கு மாற்றித் தாருங்கள் என்று தொடர்ந்து கோரிக்கை விடுத்திருக்கின்றோம். எனவே, இன்னும் சில நினைவூட்டுகள் எழுதி, மீண்டும் வலியுறுத்த இருக்கின்றோம். அது, நிச்சயமாக மாநில அரசுக்கு மாற்றம் செய்யப்படும். மேலும், உட்கட்டமைப்பு வசதிகளுக்கு எந்த மாநிலத்திலும் ஒதுக்கீடு செய்யாத அளவிற்கு, நம் மாநிலத்திற்கு இதுவரை 1,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மீனவர்களுடைய மேம்பாட்டிற்காக, மீன் வளத்திற்காக, கடல் பொருள் உணவு ஏற்றுமதியை 4½ இலட்சம் டன்னிலிருந்து குறைந்தது 8 இலட்சம் டன் அளவிற்கு வர வேண்டுமென்பதற்காக, ரூ.5 ஆயிரம் கோடியிலிருந்து ரூ.10 ஆயிரம் கோடி அந்நிய செலாவணியாக வருவதற்காக பல்வேறு முயற்சிகளை எடுத்துக்கொண்டு வருகின்றது. இந்தத் துறைமுகத்துக்காக, 100 கோடி ரூபாய், 200 கோடி ரூபாய் செலவு செய்வது என்பது ஒரு பெரிய விஷயம் அல்ல. ஆனாலும், மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற நிலையிலும்கூட, அந்தத் துறைமுகத்தை மேம்பாடு அடையச் செய்ய வேண்டுமென்பதற்காக, கிட்டத்தட்ட, ரூ.100 கோடி அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்த முதலமைச்சர், புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, விரைவில் உங்களுடைய கருத்தையொட்டி, மாநில அரசினுடைய கட்டுப்பாட்டிலே அந்தத் துறைமுகத்தைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கிடையில் நாங்கள் அதுவரை காலம் தாழ்த்தாமல், உங்களுடைய கருத்துகளை கவனத்தில் வைத்து, உடனடியாக அந்தப் படகுகளை மீட்டுக் கொண்டு வருவதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்வோம்; அதாவது, Railing-தானே சொல்கிறீர்கள்; Railing செய்யும் ஒரு yard அங்கு

2018 ஜூன் 6]

செயல்படாமல் இருக்கிறது. அதைச் செயல்படுத்துவதற்குரிய நடவடிக்கையும், தூர்வாருவதற்கான நடவடிக்கையும் நிச்சயமாக எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன் அவர்கள்.*

முற்பகல் 10-50

திரு. ப. ஆடலரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதியில் இருக்கக்கூடிய அந்தக் கடற்கரைப் பகுதியில் சுமார் 13, 14 கிராமங்கள், லகூன் பகுதிகளுக்குச் சென்று மீன்பிடித் தொழில் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அந்த சதுப்பு நில பகுதிகளில்தான் மீன்பிடித் தொழிலைச் செய்து அந்த மீன்களை முத்துப்பேட்டை பகுதிக்குக் கொண்டுவந்து விற்கக்கூடிய ஒரு நிலை இருக்கின்றது. அந்தப் பகுதிகளெல்லாம்* reserve forest *ஆக இருப்பதனால் அந்தப் பகுதிகளை தூர்வார முடியவில்லை என்று சொல்கின்றீர்கள். ஆனால், எங்களுடைய தலைவர் கலைஞர் ஆட்சியில், எங்களுடைய செயல் தலைவர் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடன் ஆலோசனை செய்து, சுமார் 100 கோடி ரூபாய்க்குமேல் திட்டமிட்டு அந்த லகூன் பகுதிகளைத் தூர் வாருவதற்காக மிதவை இயந்திரம் அங்கே கொண்டுவரப்பட்டு, அந்த இயந்திரம்கூட இன்னும் அங்கேயே இருக்கின்றது. ஆட்சி மாற்றத்தினால் அதனைக் கிடப்பில் போட்டுவிட்டீர்கள். இருந்தாலும் அதனை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

அதேபோன்று, மன்னார்குடி, திருவாரூர், தஞ்சாவூர் போன்ற பகுதிகளில் இருக்கக்கூடிய தண்ணீரெல்லாம், பருவமழை காலங்களில் வளவனாறு, கோரையாறு, பாமனியாறு ஆகிய ஆறுகளின் மூலமாக நாகை மாவட்டத்தில் உள்ள லகூன் பகுதிகளுக்குச் சென்று, கோடியக்கரையில் கலக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. ஆனால், இப்போது அந்த ஆறுகளையெல்லாம் தூர்வாருவதற்காக பணம் ஒதுக்கி அங்கே தூர்வாரும் பணி நடந்தாலும், அந்தத் தண்ணீர் சதுப்பு நிலத்தில் செல்லக்கூடிய நேரங்களில் அங்கே உள்ள முகத்துவாரங்கள் மணல் திட்டுகளால் மூடப்பட்டிருக்கின்ற காரணத்தினால், வடிகாலாக

இருக்கக்கூடிய அந்தக் கோரையாறு, பாமனியாறு போன்றவற்றின் வழியாக தண்ணீர் கடலுக்குச் செல்ல முடியாமல், தண்ணீர் தேங்கி, அந்தக் கரைகளில் எல்லாம் உடைப்பு ஏற்பட்டு, அந்தத் தண்ணீரானது விவசாய நிலங்களில் புகக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. இதனால் விவசாயிகளுக்கு நஷ்டங்கள் ஏற்பட்டு, அதனால் அந்த விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டிய ஒரு சூழ்நிலை அரசுக்கு இருக்கின்றது. விவசாயிகள் போராட்டம் போன்ற பல பிரச்சினைகள் இதனால் ஏற்படுகின்றது. எனவே, மாவட்ட ஆட்சியருக்கு ஓர் உத்தரவினைப் பிறப்பித்து, மூன்று துறைகள் ஒருங்கிணைந்து விவசாயச் சங்கங்கள் மற்றும் அங்கே இருக்கக்கூடிய மீன்பிடிச் சங்கங்களையெல்லாம் ஒருங்கிணைத்து ஓர் ஆய்வுக் கூட்டத்தை நடத்தி, அதன் மூலமாக ஒரு தீர்வைக் கண்டு, அதனைத் தூர் வாருவதற்கான வழிமுறைகளைச் செய்ய வேண்டும். அந்த மிதவை இயந்திரங்கள் மூலமாக அந்த சதுப்பு நிலங்களைத் தூர்வாரி, தண்ணீரைக் கடலில் விடுவோம் என்று சொன்னால், மழைக் காலங்களில் வெள்ளத்தினால் ஏற்படக்கூடிய இழப்புகள் தடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன், நீங்கள் கேள்வியைச் சுருக்கிக் கேளுங்கள்.

திரு. ப. ஆடலரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்களுடைய வாழ்வாதாரம் நன்றாக இருக்கும். அங்கே ஒரு துறைமுகத்தை அமைக்கவில்லை என்று சொன்னாலும், அங்கு ஒரு இறங்குதளத்தையாவது அமைத்துத் தர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட ஒரு கேள்வியை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். ஆனால், அதற்கு ஒரே பதில்தான். அந்தப் பகுதி வனத் துறையின் கட்டுப்பாட்டில் வருகின்றது. வனத் துறையின் consent இல்லாமல் எதையும் அங்கு செய்ய முடியாது. நீங்கள் 100 கோடி ரூபாயை ஒதுக்கி இருப்பதாகச் சொல்கின்றீர்கள். எப்போது

2018 ஜூன் 6]

நிதி ஒதுக்கப்பட்டது? எந்தத் துறை இதனைச் செய்தது? நான் அறிந்தவரை நிச்சயமாக மீன் வளத் துறையின்மூலம் அதனைச் செய்யவில்லை என்கிற ஒரு தகவல் மட்டும் தெரியும். நீங்கள் 100 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாகச் சொல்கின்றீர்கள். அதை execute *செய்த* department, *பொதுப் பணித் துறையா அல்லது வனத் துறையா என்பதைப் பார்க்க வேண்டும்.* Estuaries, *அதாவது முகத்துவாரங்கள் என்பது பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் அரசு உறுதியாக இருக்கின்றது. ஏனென்றால், அது இயற்கை தந்த வரம். அது ஒரு பக்கம் அழிக்கப்படாமல் இருக்க வேண்டும். அதேநேரத்தில், நீங்கள் சொல்வதைப்போல் அந்த வாய்க்கால்கள் அடைபட்டால், கரை அரிப்புகள் ஏற்படும், மீனவ கிராமங்கள் பாதிக்கப்படும், விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். இன்னொரு பெரிய பிரச்சினை என்னவென்றால், முகத்துவாரங்கள் என்பது மீன் குஞ்சுகள் இன விருத்தி செய்கின்ற இடம். அதாவது அது ஒரு குஞ்சு பொரிப்பகம். ஒரு மகப்பேறு மருத்துவமனை என்றால், முகத்துவாரத்தைத்தான் அப்படிச் சொல்ல வேண்டும். அதனால் அதிகமான அளவுக்கு* offshore fishing *என்று சொல்லக்கூடிய அண்மைக் கடல் மீன் பெருக்கத்திற்கு வழிவகை ஏற்படும் என்பதை அரசு உணர்ந்துதான் ஒரு* concrete plan, *கொண்டுவர இருக்கிறது. மொத்தமுள்ள 1,076 கிலோ மீட்டருக்கு எத்தனை முகத்துவாரங்கள் இருக்கின்றனவோ, அத்தனை முகத்துவாரங்களையும் ஆழப்படுத்தி, அகலப்படுத்தி, கடல்நீர் உள்ளே சென்று மீன் குஞ்சுகள் உற்பத்தியாகி, மீன் வளம் பெருகும் வகையில் தங்குதளமாக உபயோகப்படுத்தி, மீனவர்கள் எளிதில் கடலுக்குள் செல்லும் வகையிலும், கடல் அரிப்பு ஏற்படாமல் தடுத்து, மீனவப் பெருங்குடி மக்களைக் காப்பதற்கான ஒரு திட்டம் வகுக்கப்பட்டு,* Green Climate Fund-*ஐப் பெற்று செயல்படுத்த ஆயிரம் கோடி ரூபாயில் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கின்றது. எனவே, வருங்காலத்தில் உறுப்பினர் சொன்ன பகுதியையும் சேர்ப்பதற்குரிய நடவடிக்கையை எடுக்கலாம். ஆனாலும்கூட, முழுமையான அளவிற்கு வனத் துறையினுடைய* consent *என்பது முக்கியம். இங்கே நம்முடைய வனத் துறை அமைச்சர் அவர்கள் இருக்கின்றார்கள். அவர்களிடத்தில் கலந்துபேசி, அதில் என்ன செய்ய முடியுமோ, அதனை நிச்சயமாக செய்ய அரசு ஆலோசிக்கும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*